முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மணப்பாறை

<u>அசல் வழக்கு எண். 1/2018</u>

<u>பிடபிள்யு - 2. பொன்ராமர்</u>

<u>21.12.2018</u>

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

வாதி ரங்கசாமி எனது உடன் பிறந்த அண்ணன் என்றால் சரிதான். எனக்கு தோட்டம் உள்ளது. தோட்டத்திலும் 2 வீடுகள் உள்ளன என்றால் சரிதான் அது எனக்கும் எனது அண்ணனுக்கும் உரிய வீடுகள் ஆகும். நானும் வாதியும் பாகம் பிரித்து கொண்டோமா என்றால் இல்லை. மேற்சொன்ன தோட்ட வீடுகள் கட்டி சுமார் 30, 40 வருடங்கள் இருக்கும். அந்த வீடுகளுக்கு கதவு எண் கொடுக்கப்பட்டு வீட்டு வரி ரசீதுகள் எனது பெயரிலும் எனது அண்ணன் பெயரிலும் போடப்படுகிறது என்றால் சரிதான். சர்வே எண் 41 ல் விஸ்தீரணம் 20, 25 சென்ட் உள்ள இடம் தான் பிரச்சினைக்குரிய இடமாகும். அந்த இடம் நத்தம் புறம்போக்கு இடம் என்றால் சரிதான். நாங்கள் அதில் எவ்வளவு இடத்தை அனுபவித்து வருகிறோம் என்றால் மொத்த இடத்தையும் 32 வருடங்களாக அனுபவித்து வருகிறோம். தாவா இடத்திற்கு எங்கள் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் எவ்வளவு பரப்பளவில் கொட்டகை போட்டுள்ளோம் என்றால் 11 சென்ட் பரப்பளவில் கொட்டகை போட்டுள்ளோம். மீத இடம் எங்களின் புழக்கத்தில் உள்ளது. அது 22 அடி நீளம் 10 அடி அகலம் இருக்கும். எவ்வாறு மீத இடத்தை புழக்கமாக வைத்துள்ளதாக சொல்கிறேன் என்றால் காலியிடமாக உள்ளது. கொட்டகை போட உள்ளோம். வருவாய் ஆவணங்களில் நாங்கள் அனுபவிக்கும் இடத்தின் நீள அகலம் மற்றும் யார் அனுபவிக்கிறார்கள் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். நான் தாவா சொத்திற்குரிய வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் தாவா சொத்தை பயன்படுத்த வில்லை என்றும் வழக்கிற்காக அனுபவித்தில் உள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு பின்புறத்தில் பிரதிவாதி குடியிருந்து வருகிறாரா என்றால் குடியிருந்து வருகிறார். பிரதிவாதி என் மீதும் வாதி மீதும் தாவா இடத்தில் இருந்த கூரையை எரித்ததாக புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். அதில் எங்களை காவல்

துறையினா் விசாரித்தனரா என்றால் விசாரித்தனா் அதன் பிறகு அந்த மனு பொய்யானது என்று தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வழக்கிற்கு 2 வருடத்திற்கு முன்பாக மேற்சொன்ன சம்பவம் நடந்தது. நத்தம் புறம்போக்கில் வேறு இடத்தில் எதாவது எங்களுக்கு பட்டா உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் தாக்கல் செய்த வீட்டு வரி ரசீதுகள் எங்கள் தோட்ட வீட்டிற்கு உரியவை என்றால் சரியல்ல. தாவா இடத்தில் வீடு உள்ளதாக சொல்வதிலிருந்து அதற்குரிய கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. பட்டா கோரி நாங்கள் மனு கொடுத்தோமா என்றால் கொடுத்தோம் அது நிலுவையில் உள்ளது. நாங்கள் தாவா இடத்தை அனுபவிக்காததால் எங்கள் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தற்போது வரை தாவா இடம் காலி நத்தமாக உள்ளது என்றால் சரியல்ல. நத்தம் இடத்தில் உள்ளவா்கள் தனது முன்புறம் மற்றம் பின்புற இடங்களை தங்கள் புழக்கத்திற்கு பயன்படுத்தி வருகிறாா்கள் என்றால் சரிதான். தாவா இடத்தை பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறாா் என்றும் அவரது போரையும் செட்டையும் எரித்து விட்டு பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.